ස්ථාවර නියෝග අංක 119 (4) ප්‍රකාර රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් නිරීක්ෂණ සහ ගනු ලැබූ ක්‍රියාමාර්ග ඉදිරිපත් කිරීම.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

Submission of observations and steps taken with regard to the reports presented to the Parliament by the Committee on Public Accounts in terms of theStanding Order No. 119(4)

පාර්ලිමේන්තුවේ සභානායක කාර්යාලය
பாராளுமன்ற சபைமுதல்வரின் அலுவலகம்
Office of the Leader of the House of Parliament

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகளும் முன்னெடுப்புகளும் பற்றிய அறிக்கையிடல்

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்

2023 நிதியாண்டிற்கான நிதி மற்றும் செயலாற்றுகை மீளாய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்/தற்போதைய நிலை
<u>பகுதி 1</u> • **அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை**	பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகத்தில் 12 வாகனங்கள் மட்டுமே உள்ளன. அதாவது, 05 ஒதுக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் 07 குழும வாகனங்கள் என்பனவாகும். அதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பழுதுபார்ப்புக்கு அனுப்பப்படும் போது, அதிகாரிகளின் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களில் 02 வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் அனைத்தும் 15 – 20 வருடங்களுக்கு மேல் பழைய வாய்ந்த வாகனங்களாகும். மேலும், பாராளுமன்றத்திற்கு அருகாமையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்கள், கலவரங்கள் என்பன நடப்பதால், மேற்கண்ட சம்பவங்களில் ஆத்திரமடையும் நபர்களால் வாகனங்கள் சேதப்படுத்தப்படலாம் என்பதால், அரச சின்னம் நிரந்தரமாக பொறிக்கப்படாமல், ஒவ்வொரு வாகனத்தையும் இனங்காணக் கூடியவாறு அரச சின்னம் அச்சிடப்பட்டு. வாகனத்தின் முன்பகுதியில் காட்சிப்படுத்துவதற்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை மேலும் குறிப்பிட விரும்புகின்றேன்.
• **வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 02 கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.**	பாராளுமன்றத்தின் சபை முதல்வர் அலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பதவியணியினுள் கணக்காளர் பதவியொன்று அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கணக்காய்வுப் பிரிவொன்றும் நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நி.பி. 134(2) இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் அதிகம் நடாத்துவதற்கு முடியாமல் போனது. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைக்க வேண்டிய நிறுவனங்களின் கீழ் பாராளுமன்றத்தின் சபை முதல்வரின் அலுவலகம் குறிப்பிடப்படாத போதிலும், 2023.08.24 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பொருத்தமான அலுவலர் ஒருவர் உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்க வேண்டியுள்ளதால், சபைமுதல்வர் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்த முகாமைத்துவ சேவைகள் அலுவலர் ஒருவர் தற்போது உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எனவே நி.பி. 134(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக உள்ளது.

பகுதி 2 **இனங்கண்ட நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்கங்களுக்கான இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.**	பாராளமன்றத்தின் சபை முதல்வரின் அலுவலகத்தினால் சட்டமூலங்கள் மற்றும் அறிக்கைகள் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக ஆற்றுப்படுத்தப்படுவதுடன், அது தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் முழுப் பொறுப்பும் அந்தந்த அமைச்சிற்கு உரித்தாகும். இந்த அறிக்கைகள் மற்றும் சட்டங்கள் என்பவற்றினை அமுல்படுத்தும் போது பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியும். எவ்வாறாயினும் அதனை அமுல்படுத்தும் போது அது பற்றிய குறித்த பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் உரிய அமைச்சினால் நிறைவேற்றிக் கொள்வதனால் அது பற்றி நடவடிக்கை எடுக்க சபை முதல்வரின் அலுவலகத்தினால் முடியாது.